**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.120/2019**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1** ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுரேஷ் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | வட்ட சார் ஆய்வாளர் |
| கிராமம் | : | அரியப்பம்பாளையம் | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் அரியப்பம்பாளையம் வட்ட சார் ஆய்வாளராக உள்ளேன். நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். அழைப்பாணையில் உள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். பட்டா எண்.326, புல எண்.255/7 ஜெகதீஷ்சன் பட்டா உள்ளது. புல எண்.255/7 ன் அளவு 167 சதுர மீட்டர் ஆகும். புல எண்.255/7 க்கு வடபுறம் 10.8 மீட்டரும், கிழபுறம் 16 மீட்டரும், தென்புறம் 10 மீட்டரும், மேபுறம் 16.2 மீட்டர் புலவரைபடத்தின் படி தடத்தில் உள்ளது. 255/8 க்கு புல வரைபடத்தின்படி வடபுறம் 10.06 மீட்டரும், கிழபுறம் 15.6 மீட்டரும், தென்புறம் 10.6 மீட்டரும், மேபுறம் 16.0 மீட்டரும் அளவுகள் உள்ளது. புல எண்.255/7 க்கும் புல எண்.255/8 க்கும் நான்கு புற அளவுகள் ஒரே மாதிரியாக இல்லை. புல எண்.255/7 மற்றும் புல எண்.255/8 ல் உள்ள கட்டிட பரப்பளவு மற்றும் காலி மனை அளவுகளை அளந்து பார்த்தால் தான் கூற முடியும். புல எண்.255/7 ன் நத்தம் தூய அடங்கல் **சா.சா.ஆ.1** ஆகவும், புல எண்.255/7 ன் சிட்டா **சா.சா.ஆ.2** ஆகவும், புல எண்.255/7 மற்றும் புல எண்.255/8 க்கான கணினி சிட்டா சான்று நகல் **சா.சா.ஆ.3** ஆகவும், புல எண்.255/7 மற்றும் புல எண்.255/8 RSR பதிவுகள் **சா.சா.ஆ.4** ஆகவும், மேற்படி இரு சொத்துக்களின் புல வரைபடம் கணினி நகல் **சா.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1ம் பிரதிவாதி தரப்பில் ஆஜர் இல்லை.  பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.25 04:33:43 +0530

District Munsif